# கிரீன்வுட் தொடக்கப்பள்ளியில் அனைத்துலக நட்புத் தினக் கொண்டாட்டம்

~ மின்னேடு பதிப்பு 1

6 ஏப்ரல் 2022, புதன்கிழமை அன்று கிரீன்வுட் தொடக்கப்பள்ளியில் ‘அனைத்துலக நட்புத் தினம்’ கொண்டாடப்பட்டது. கடல் சூழ்ந்த சிறுப் புள்ளியான சிங்கப்பூர் அண்டை நாடுகளுடனும் உலக நாடுகளுடனும் கொண்ட உறவுகளைப் புரிந்துகொள்வதற்காகவும் ஊக்குவிப்பதற்காகவும் இந்நாள் கொண்டாடப்படுகிறது. பல்வேறு நாட்டினருக்கு இடையே வலுவான ஒற்றுமையையும் நட்பையும் வளர்ப்பதன் அவசியத்தை உணர்த்துவதே இத்தினம் கொண்டாடப்படுவதன் முக்கிய நோக்கமாகும்.















‘ஆசியாவில் சிங்கப்பூர்’ (Singapore in Asia) என்பதே இவ்வாண்டு கொண்டாட்டத்தின் கருப்பொருள் ஆகும். எங்கள் பள்ளி கொண்டாட்டத்தில் இக்கருப்பொருளை ஒன்றியமைந்த பல அம்சங்கள் நிறைந்திருந்தன. ஆசியான் (ASEAN) நாட்டுக் கொடிகள் எங்கள் பள்ளி வளாகத்தை மிக அழகாக அலங்கரித்தன. இது மாணவர்களாகிய எங்களது ஆர்வத்தைப் பெரிதும் தூண்டியது. தேர்ந்தெடுக்கப்பட்ட பிற நாட்டைச் சேர்ந்த மாணவர்கள் சிலர், அவர்களின் தாய்நாட்டின் கலாசாரம், பாரம்பரிய உணவு, உடை மற்றும் அவர்களின் நாட்டைப் பற்றிய சுவாரசியமான செய்திகளைப் பகிர்ந்துகொண்டார்கள். இதன்மூலம் நாங்கள் மற்ற நாடுகளின் பண்பாட்டையும் பழக்கவழக்கங்களை அறிந்துகொண்டதோடு அவற்றை மதித்துப் பாராட்டவும் கற்றுக்கொண்டோம்.

# கிரீன்வுட் தொடக்கப்பள்ளியில் அனைத்துலக நட்புத் தினக் கொண்டாட்டம்

~ மின்னேடு பதிப்பு 1

உலக நட்பு தினத்தன்று வகுப்பில் நாங்கள் கண்ட காணொளியின்மூலம் பல புதிய தகவல்களைக் தெரிந்துகொண்டோம். வகுப்பில் பல நடவடிக்கைகள் நடத்தப்பட்டிருந்தாலும் வரைப்படத்திலுள்ள நாடுகளை கண்டுபிடிக்கும் நடவடிக்கை என்னையும் என் நண்பர்களை அதிகம் கவர்ந்தது. சில நாடுகளின் பாரம்பரிய விளையாட்டுகளையும் விளையாடிப் பார்க்க ஒரு வாய்ப்புக் கிடைத்தது.

~ மன்ஹா 5RY

எல்லா நாட்டுகளிலும் அனைத்து வசதிகளும் வளங்களும் கிடையாது. நாம் மற்ற நாடுகளுடன் நட்புறவோடு இருந்தால்தான் பயனடைய முடியும். சிங்கப்பூரில் இயற்கை வளங்கள் குறைவு. பிரச்சனைகளையும் போர்களையும் தடுக்க ஒரே வழி நாம் மற்ற தேசங்களோடு ஒத்து வாழ்வதே ஆகும்!

~ கிரிஷ்வ் 5RY

சிங்கப்பூர் சிறிய நாடாக இருந்தாலும் பொருளாதார வளர்ச்சி கண்ட நாடாக இருப்பதால் வெளிநாடுகளிலிருந்து மக்கள் நம் நாட்டிற்கு வேலை வாய்ப்புத் தேடி வருகிறார்கள். நாம் அவர்களை ஒதுக்கிவிடக்கூடாது. அவர்களுடன் அன்போடு பழக வேண்டும்.

~ஹர்ஷித் 5RE

**மாணவர்க் குழு :**



**இடதிலிருந்து வலம்**
**சாதனா 5RY, மன்ஹா 5RY, மிஷாலி 5RT, தியா 5RY, ஹர்ஷித் 5RE, ஆருஷ் 5RT, ஜோசுவா 5IN, கிரிஷ்வ் 5RY, ஹரிணி 5RT, அனுஸ்ரீ 5RE, ரேவதி 5RY, கிருத்தின் 5RY**

SCAN ME

**மாணவி சாதனாவின் பகிர்வைக் கேளுங்கள்!**